# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1922/61 - 2015 ජූලි මස 11 වැනි සෙනසුරාදා - 2015.07.11

*1922/61ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2015*

**வாக்கெடுப்பு நிலையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிகழும் நிலைமை காரணமாக அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாமல் போகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு வேறொரு வாக்ககெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்றல் 2015.07.14 ஆந் திகதி முடிவடையுமென அறிவித்தல்**

*2015, பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தமது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிகழும் நிலைமை காரணமாக வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாமல் போகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பப்பத்திரங்களைக் கையளிப்பதற்கான கால எல்லை 2015.07.10 ஆந் திகதியுடன் முடிவடைவதற்கு நியமித்திருந்த போதிலும் பொது மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியற் கட்சிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைக் கவனத்திற்குக் கொண்டதன் பின்னர் விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கால எல்லை 2015.07.14 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.*

*2. விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம், எக்காரணம் கொண்டும் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது. எனவே இதுவரையில் அதற்காக விண்ணப்பிக்க முடியாமல் போன, மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்த மற்றும் 2014 தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்த வாக்காளர்கள் தவறின்றி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை தாங்கள் தற்போது வதியும் பிரிவின் கிராம அலுவலரது சான்றிதழுடன் 2015.07.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திற்கு அல்லது அண்மையிலுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்குக் கையளிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு தயவன்புடன் அறியத் தருகின்றேன்.*

*3. 2015.07.14 ஆந் திகதிக்கு பின்னர் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வித காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதுடன் அவை தாமதமாகிக் கிடைத்த விண்ணப்பப்பத்திரங்கள் எனக் கருதி நிராகரிக்கப்படும்.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

*2015, யூலை 11 ஆந் திகதி*
*இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திலிருந்து.*

*7-1340*